IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, NAMAKKAL
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

CC . No. 310/2020 Dep.of - PW.1

Name : அன்னக்கிளி Caste :
Fathers Name : Calling :
Village : Religion:
Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act x of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------22

Chief Examination : Date : 14.11.2022

நான் தற்பொழுது போதுப்பட்டி, அண்ணா நகர் காலனியில் குடியிருந்துகொண்டு இல்லத்தரசியாக இருந்து வருகிறேன்.ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். மாரிகங்கானித் தெருவில் உள்ள சின்ன மாரியம்மன் கோவிலில் திருவிழா நடந்ததால் அந்த திருவிழாவில் கலந்துகொள்வதற்காக வண்டிக்காரத் தெருவில் உள்ள எனது அண்ணன் பழனிச்சாமி வீட்டிற்கு கடந்த 29.04.2018 ம் தேதியன்று பால்குடம் எடுப்பதற்காக நானும், எனது சகோதரி சுப்புலட்சுமி, மஞ்சுளா, கலைவாணி ஆகியோர்கள் சென்றிருந்தோம். திருவிழாவில் பால் குடம் எடுத்துவிட்டு எனது அண்ணன் வீட்டில் இரவு சுமார் 09.00 மணிக்கு நாங்கள் உட்கார்ந்திருந்தோம். அன்றைய தினம் வண்டிக்காரத் தெருவிற்கு பக்கத்து தெருவான சுண்ணாம்புகாரத் தெருவில் உள்ள பகவதியம்மன் கோவிலில் தேர் திருவிழா நடந்தது. நாங்கள் உட்கார்ந்திருந்தபொழுது சுண்ணாம்புக்காரத் தெருவில் இருந்து வண்டிக்காரத் தெருவிற்கு தேர் வந்தது. அப்பொழுது 2ம் எதிரி கணேசன் என்பவர் மாரிகங்கானித் தெருவை சேர்ந்த ஒரு பையனை துரத்திக்கொண்டு வந்தார். நான் இரண்டாம் எதிரியிடம் எதற்காக எங்கள் தெருவை சேர்ந்த பையனை துரத்திக்கொண்டு வருகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு 2ம் எதிரி உனக்கெல்லாம் பதில் சொல்லனுமாடி பறத் தேவடியா மகளே என்று திட்டி கல்லை எடுத்து என்மீது வீசியடித்தார். அந்த கல்லானது எனது வலது கை மணிக்கட்டில் பட்டு காயம் ஏற்பட்டது. மற்ற எதிரிகளும் கல்லை எடுத்து

எங்கள்மீது அடித்தார்கள். அந்த கல்லானது என்னுடன் இருந்த சுப்புலட்சுமி என்பவரின் வலது பக்க தோள்பட்டை மற்றும் வலது காலில் பட்டு காயம் ஏற்பட்டது. மஞ்சுளா, கலைவாணி, தனபாக்கியம் ஆகியோர்கள்மீது அந்த கல்லானது பட்டு லேசான காயம் ஏற்பட்டது. நாங்கள் சத்தம் போட்டதால் அந்தத இடத்தில் கூட்டம் சேர்ந்துவிட்டது. அப்பொழுது எதிரிகள் எங்களை பார்த்து இன்னைக்கு இத்தோடு விட்டுவிட்டோம், மறுபடியும் எங்கள் கையில் கிடைத்தால் உங்களை கொல்லாம்ல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். அதன் பின்னர் அடிபட்ட எங்களை எனது மகன் மோகன் என்பவர் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார். நான் சிகிச்சையில் இருந்தபொழுது நாமக்கல் போலிசார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலமானது நான் கொடுத்தது தான். அந்த புகார் வாக்குமூலத்தை போலிசார் நான் சொல்ல சொல்ல எழுதி என்னிடம் படித்து காண்பித்து கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது) அந்த புகார் வாக்குமூலத்தில் கலைவாணி என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்திற்கு முன்னர் சுண்ணாம்புக்கார தெருவில் நடந்த தேர் திருவிழாவிற்கு பாதுகாப்பிற்கு வந்திருந்த காவல் துறையினரின் வாகனங்களை மாரிகங்கானித் தெருவை சேர்ந்த சுமார் பதினேழு நபர்கள் அடித்து உடைத்து சேதப்படுத்தி போலிசாரை தாக்கி காயப்படுத்தியது சம்பந்தமாக எங்கள் தெருவை சேர்ந்த நபர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது உறவுக்காரர்களும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரணை செய்தபொழுது 2ம் எதிரி எனது ஜாதியை

கொச்சைப்படுத்தி திட்டினார் என்ற விபர்ததை கூறினேனா என்றால் கூறினேன். போலிசார் நான் சொன்னதை எழுதிக்கொள்ளவில்லை. நான் போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தை போலிசார் எழுதிக்கொள்ளவில்லை என்று நான் மேல் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. போலிசார் என்னை அரசு மருத்துவமனையில் எந்த தேதியன்று எத்தனை மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்று இரவு சுமார் 10.00 மணிக்கு மேல் வந்து விசாரித்தார்கள். மறுநாள் தான் புகார் வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பம் பெற்றார்கள். 2ம் எதிரி என்மீது கல்லை எடுத்து வீசி அடித்தார் என்ற விபரத்தை போலிசார் என்னை விசாரணை செய்தபொழுது கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சாட்சிகள் மஞ்சுளா, சுப்புலட்சுமி, கலைவாணி, செல்வி, லட்சுமி ஆகியோர் எனக்கு என்ன உறவு முறை என்றால் சுப்புலட்சுமி என்பவர் எனது தங்கையாவார். மற்றவர்கள் எனக்கு அண்ணி உறவுமுறை வேண்டும். மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரணை செய்த பின்னர் மீண்டும் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். என்னை மருத்துவமனையில் விசாரணை செய்த காவல் துறையை சேர்ந்த நபரின் பதிவு என்ன என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் தெருவில் பலதரப்பட்ட சமூக மக்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும், அந்த ரோடானது பொதுவான தார்ரோடு என்றாலும் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கும், எனது அண்ணன் பழனிச்சாமி என்பவரின் வீட்டிற்கும் எவ்வளவு துரம் இருக்கும் என்றால் சுமார் ஐம்பது அடி தூரம் இருக்கும். மருத்துவமனைக்கு போலிசார் வந்து என்னை மட்டும் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா அல்லது அப்பொழுதே மற்றவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் அப்பொழுதே என்னையும், மற்றவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். சாட்சிகள் சத்தியா, மாரியம்மாள் ஆகியோர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது உறவினர்கள் இல்லை. நான் சொல்வதுபோன்று சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை

என்றாலும், எனது உறவுக்காரர்கள்மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கில் இருந்து எனது உறவுக்காரர்களை காப்பாற்றுவதற்காக பொய்யான ஒரு புகாரை நான் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 2ம் எதிரி துரத்திக்கொண்டு வந்ததாக கூறப்படும் பையனின் பெயர், எந்த ஊர் மற்றும் அந்த பையனை பற்றிய விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் அந்த பையன் எனது ஊரைச் சேர்ந்தவர் ஆவார். அந்த பையனை பற்றிய மற்ற விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. நான் போதுப்பட்டி அண்ணா நகரில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 2ம் எதிரி எந்த பையனையும் துரத்திக்கொண்டு வரவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் கற்பனையாக அவ்வாறு கூறியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, NAMAKKAL
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

CC . No. 310/2020 Dep.of - PW.2

Name : மஞ்சுளா Caste :
Fathers Name : Calling :
Village : Religion:
Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act x of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------22

Chief Examination : Date : 14.11.2022

நான் தற்பொழுது நாமக்கல் மாரி கங்கானி தெருவில் குடியிருந்துகொண்டு இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 அன்னகிளி என்பவர் எனது பெரிய மாமனார் மகள் ஆவார். கடந்த 29.04.2018ம் தேதி இரவு 09.15 மணிக்கு வண்டிக்காரர் தெருவில் உள்ள எங்கள் கொழுந்தனார் வீட்டில் நானும், அன்னக்கிளி, சுப்பு, செல்வி, கலைவாணி ஆகியோர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது 2ம் எதிரி கணேசன் ஒரு பையனை துரத்திக்கொண்டு வந்தார். அப்பொழுது அ.சா.1 அன்னக்கிளி என்பவர் 2ம் எதிரியை பார்த்து எதுக்குணா அந்த பையனை துரத்தறீங்க என்று கேட்டார். அதற்கு 2ம் எதிரி அ.சா.1ஐ பார்த்து பற தேவடியா என்று திட்டி கல்லை எடுத்து வீசி அடித்துவிட்டார். எதிரிகள் அனைவரும் கல்லை எடுத்து வீசி அடித்தார்கள். அன்னக்கிளி என்பவருக்கு வலது கை மணிக்கட்டில் காயம் ஏற்பட்டது. சுப்புலட்சுமி என்பவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. எனக்கு முதுகில் உள் அடிபட்டது. எதிரிகள் எங்களை பார்த்து இப்ப தப்பிச்சிக்கிட்டீங்க எப்ப இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். அடிபட்ட எங்களை அ.சா.1ன் மகன் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

போலிசார் எப்பொழுது எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்று நாமக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து இரவு சுமார் 09.30 மணியில் இருந்து 10.00 மணிக்குள் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தபொழுது எதிரிகள் எங்களை ஜாதி பெயரை சொல்லி திட்டினார்கள் என்று கூறினேனா என்றால் கூறினேன். ஆனால் போலிசார் எழுதிக்கொள்ளவில்லை. போலிசார் எங்களிடம் கேட்கும் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள் என்று கூறிவிட்டனர். இவ்வழக்கில் உள்ள சாட்சிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்திற்கு முன்னர் சுண்ணாம்புக்கார தெருவில் நடந்த தேர் திருவிழாவிற்கு பாதுகாப்பிற்கு வந்திருந்த காவல் துறையினரின் வாகனங்களை மாரிகங்கானித் தெருவை சேர்ந்த சுமார் இருபத்தி ஒன்று நபர்கள் அடித்து உடைத்து சேதப்படுத்தி போலிசாரை தாக்கி காயப்படுத்தியது சம்பந்தமாக எங்கள் தெருவை சேர்ந்த நபர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது உறவுக்காரர்களும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. போலிசாரின் வாகனங்களை அடித்து உடைத்தபொழுது நான் அங்கு இல்லை என்றால் சரிதான். எனக்கு முதுகில் அடிபட்டு விட்டது என்ற விபரத்தை போலிசார் என்னை விசாரணை செய்தபொழுது கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 2ம் எதிரி துரத்தி வந்ததாக கூறப்படும் பையன் யார், அவரது முகவரி, அவரது அங்க அடையாளங்கள் எதையும் நான் போலிசாரிடம் கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எங்களை பார்த்து என்னைக்கு இருந்தாலும் உங்களை பழிவாங்குவோம் என்று மிரட்டினார்கள் என்று போலிசார் என்னை விசாரணை செய்தபொழுது கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எதிரிகள் சரமாரியாக கற்களை எடுத்து வீசினார்கள் என்று போலிசார் என்னை விசாரணை செய்தபொழுது கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்ற தேதியிலேயே மற்றவர்களையும்

விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் ஆமாம். மாரிகங்கானி தெருவில் பல சமூகத்தை சேர்ந்தவர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரணை செய்த பின்னர் மீண்டும் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் போலிசார் என்னை மூன்று முறை விசாரணை செய்துள்ளார்கள். எனது கொழுந்தனார் பழனிச்சாமி என்பவரின் வீடானது பகவதியம்மன் கோவிலில் இருந்து ஐநூறு அடி தள்ளி தென்புறத்தில் ஒரு சந்துக்குள் உள்ளது என்றால் மெயின் ரோட்டில் உள்ளது. பகவதியம்மன் கோவிலுக்கு முன்புறம் பூ மதிப்பதற்காக ஒரு வளாகம் உள்ளது என்றால் சரிதான். மாரிகங்கானித் தெருவில் உள்ள மாரியம்மன் கோவிலை ஒட்டி பகவதியம்மன் கோவிலுக்கு சம்பந்தப்பட்ட விநாயகர் கோவில் ஒன்று உள்ளது என்றால் சரிதான். பகவதி அம்மன் கோவிலுக்கு எதிரில் சுண்ணாம்பு சூளைகள் வரிசையாக உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோன்று சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் நடந்த கலவரம் சம்பந்தமாக பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண்.358/2018 என்ற வழக்கில் உள்ள எனது உறவினர்களை காப்பாற்றுவதற்காக அன்னக்கிளி என்பவர் கொடுத்துள்ள பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, NAMAKKAL
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

CC . No. 310/2020 Dep.of - PW.3

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்புலட்சுமி | Caste | : |
| Fathers Name | : | Calling | : |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act x of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------22

Chief Examination : Date : 14.11.2022

நான் தற்பொழுது திருச்செங்கோடு ஆறுமுகம் நகரில் குடியிருந்துகொண்டு இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 அன்னகிளி என்பவர் எனது அக்காள் ஆவார். அ.சா.2 மஞ்சுளா என்பவர் எனது சித்தப்பா மருமகள் ஆவார். கடந்த 29.04.2018 ம் தேதி இரவு 09.15 மணிக்கு வண்டிக்காரர் தெருவில் உள்ள எனது அண்ணன் பழனிசாமி வீட்டில் நானும், அன்னக்கிளி, செல்வி, கலைவாணி, மஞ்சுளா ஆகியோர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது 2 ம் எதிரி கணேசன் ஒரு பையனை துரத்திக்கொண்டு வந்தார். அப்பொழுது அ.சா.1 அன்னக்கிளி என்பவர் 2 ம் எதிரியை பார்த்து எதுக்குணா அந்த பையனை துரத்தறீங்க என்று கேட்டார். அதற்கு 2 ம் எதிரி அ.சா.1 ஐ பார்த்து பற தேவடியா என்று திட்டி கல்லை எடுத்து வீசி அடித்துவிட்டார். எதிரிகள் அனைவரும் கல்லை எடுத்து வீசி அடித்தார்கள். அன்னக்கிளி என்பவருக்கு வலது கை மணிக்கட்டில் காயம் ஏற்பட்டது. எனக்கு வலது தோள்பட்டை மற்றும் வலது காலில் காயம் ஏற்பட்டது. மஞ்சுளாவிற்கு முதுகில் உள் அடிபட்டது. அடிபட்ட எங்களை அ.சா.1 ன் மகன் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்திற்கு முன்னர் சுண்ணாம்புக்கார தெருவில் நடந்த தேர் திருவிழாவிற்கு பாதுகாப்பிற்கு வந்திருந்த காவல் துறையினரின் வாகனங்களை மாரிகங்கானித் தெருவை சேர்ந்த சுமார் இருபத்தி ஒன்று நபர்கள் அடித்து உடைத்து சேதப்படுத்தி போலிசாரை தாக்கி காயப்படுத்தியது சம்பந்தமாக எங்கள் தெருவை சேர்ந்த நபர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் கேட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தபொழுது மற்றவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். நாமக்கல் காவல் நிலையத்தில் இருந்து எந்த போலிசார் வந்து விசாரித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரணை செய்த பின்னர் மீண்டும் என்னை போலிசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சாட்சிகளில் உள்ள மோகன், அன்னகிளி, மஞ்சுளா, செல்வி, கலைவாணி, லட்சுமி, தனபாக்கியம், சத்யா, மாரியம்மாள் ஆகியோர் எனது உறவுக்காரர்கள் என்றால் அன்னகிளி மற்றும் கலைவாணி ஆகியோர் எனது உறவினர்கள் ஆவார். தனபாக்கியம் எனது அண்ணி ராசாம்பாள் என்பவரின் அத்தை ஆவார். மற்றவர்கள் எனது சித்தப்பா மருமகள்கள் ஆவர். போலிசார் என்னை விசாரணை செய்தபொழுது எதிரிகள் எங்களை ஜாதி பெயரை சொல்லி திட்டினார்கள் என்று கூறினேனா என்றால் கூறினேன். எனக்கு வலது காலில் அடிபட்டுவிட்டது என்ற விபரத்தை போலிசார் என்னை விசாரணை செய்தபொழுது கூறினேனா என்றால் கூறினேன். நான்சொல்வது போன்று எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், அன்னக்கிளி என்பவர் எனது உடன் பிறந்த அக்காள் என்பதால் அன்னக்கிளி கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.